## ஐந்தாம் வகுப்பு - கட்டுரை


தாள் - 3

பெயர் : ______________ தேதி : ________

வகுப்பு : 5 - ___

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. ஆழ்ந்த உறக்கத்தில்
2. தலைக்கு மேல் பல்லி ஊர்ந்து
3. சாப்பிட அழைப்பதற்கு
4. திரும்பிச் சென்றார்
5. இரு பல்லிகளும்
6. சண்டையிட்டன
7. தலையில் தொப்பென்று
8. திடுக்கிட்டு எழுந்தாள்
9. தொண்டை கிழிய கத்தினாள்
10. விரைந்து வந்தார்கள்
11. துடைப்பத்தைக் கொண்டு
12. விரட்டினார்



P 5

CA - 1

# நேர்வுத்தாள் -3

1 முதல் 32 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் , சரியான விடையின் எண்ணுள்ள ( 1, 2. 3 அல்லது 4 ) நீள்வட்டத்தை நிழலிடு

## “ அ ” பிரிவு

<u>வேற்றுமை</u>

1 முதல் 6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து , அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(12 மதிப்பெண்கள்)

ஆப்ரஹாம் லிங்கன் ஓர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். அவருடைய குடும்பத்திற்குச் சொந்தமான வீடும் (1)______ இருந்தது. ஒருநாள் கடன் கொடுத்தவர் வந்து , “ வாங்கிய பணத்தை இப்போதே திருப்பிக் கொடுங்கள். இல்லையேல் (2)______ காலி செய்யுங்கள் ! ” என்று மிரட்டினார். அதற்கு லிங்கனின் தந்தை , “ ஐயா ! அடுத்த மாதம் என் (3)______ ஆண்டிறுதித் தேர்வு வருகிறது. இந்தச் சமயத்தில் உடனே வீட்டைவிட்டு வெளியேறினால் (4)______ படிப்பில் கவனம் செலுத்தாமல் போய்விடும். தயவுசெய்து (5)______ இரண்டு வாரம் அவகாசம் தாருங்கள் ! ” என்று கெஞ்சினார். இதை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்த லிங்கன், “ அப்பா , (6)______ கெஞ்சவேண்டாம் ! ” என்று கூறி வீட்டைவிட்டுக் கிளம்பினார். அவர் தெரு விளக்கில் உட்கார்ந்து படித்தார் ; வாழ்வில் முன்னேறினார்.

1. (1) கடனை
   (2) கடனுக்கு
   (3) கடனில்
   (4) கடனால் ( )



38

www.testpapersfree.com

2. (1) வீட்டை
(2) வீட்டில்
(3) வீட்டிலிருந்து
(4) வீட்டோடு ( )

3. (1) மகனால்
(2) மகனுடன்
(3) மகனிடம்
(4) மகனுடைய ( )

4. (1) அவனிடம்
(2) அவனை
(3) அவனால்
(4) அவனிடமிருந்து ( )

5. (1) எங்களுக்கு
(2) எங்களிடம்
(3) எங்களை
(4) எங்களுடன் ( )

6. (1) அவரிடம்
(2) அவருக்கு
(3) அவருடன்
(4) அவருடைய ( )



39

www.testpapersfree.com

## செய்யுள் / பழமொழி

செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் , **OAS** விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

7. சுடினும் செம்பொன் தன்னொளி ______________.

(1) கெடாது
(2) குறையாது
(3) தெரியாது
(4) குன்றாது
( )

8. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் ______________ .

(1) சுடும்
(2) கெடும்
(3) கெடுதல்
(4) நஞ்சு
( )

9. __________ செய்பவர் படாது படுவர்.

(1) தீங்கு
(2) தவறு
(3) குற்றம்
(4) அடாது
( )

10. ஔவியம் ______________ .

(1) பேசேல்
(2) மறவேல்
(3) கரவேல்
(4) இகழேல்
( )



4C

www.testpapersfree.com

11. செயற்கரிய செய்வார் ____________ சிறியர் செயற்கரிய செய்கலா தார்.

(1) பெற்றோர்
(2)சான்றோர்
(3)பெரியோர்
(4)பெரியர் ( )

12. ____________ தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல்.

(1) மூத்தவன்
(2)தமையன்
(3)மகன்
(4)மகள் ( )

<u>தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>

<u>பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி</u>

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கப்பூரில் பெரும்பாலான மக்கள் கிராமங்களில் வாழ்ந்தார்கள். அதே போல சாங்கி வட்டாரத்திலும் பல மீன்பிடிக் கிராமங்கள் இருந்தன. அங்கிருந்து இரு பேருந்தில் சேவைகள் ஓடிக்கொண்டிருந்தன. ஒன்று சிராங்கூன் சாலைக்கும் மற்றொன்று விக்டோரியா சாலைக்கும் சென்றன. பேருந்தில் அப்போது ஓட்டுநருடன் நடத்துனர் ஒருவரும் பணி புரிந்தார். நடத்துனர் பயணிகளிடமிருந்து கட்டணத்தை வாங்கிக்கொண்டு பயணச்சீட்டை வழங்குவார் ; மீதிப் பணத்தையும் திருப்பித் தருவார். மேலும் பயணிகள் பேருந்திலிருந்து இறங்கிவிட்டால் ஊதலைப் பயன்படுத்தி ஓட்டுநருக்குத் <u>தெரிவிப்பார்.</u>



4-1

www.testpapersfree.com

ஒருசமயம் சாங்கியில் முத்து என்ற மீனவன் ஒரு பெரிய கருவாட்டு மூட்டையுடன் பேருந்தில் ஏறினான். விக்டோரியா சாலைக்குப் போகும் அந்தப் பேருந்து கூட்டமாக இருந்தது. நடத்துனர் பயணிகள் ஒவ்வொருக்கும் பயணச்சீட்டைக் கொடுத்துவிட்டு முத்துவிடம் வந்தார். அப்போது பேருந்து பிடோக்கை நெருங்கிக்கொண்டிருந்தது. “ நீ எங்கே போகிறாய் ? ” என்று நடத்துனர் வினவினார். “ நான் காத்தோங் போகவேண்டும் , ” என்று முத்து பதிலளித்தான். அதைக் கேட்ட நடத்துனர் , “ என்ன முட்டாளாக இருக்கிறாய் ! இது அங்கே போகாது என்று உனக்குத் தெரியாதா ? உடனே பேருந்தைவிட்டுக் கீழே இறங்கு ! ” என்று கட்டளையிட்டார். முத்து முணுமுணுத்துக்கொண்டே மூட்டையைத் தூக்கிக்கொண்டு கீழே இறங்கினான்.

“ ஐயோ பாவம் ! படிக்கத் தெரியாததால் , பேருந்து எங்குப் போகிறது என்று தெரியாமல் ஏறிவிட்டான் . இவ்வளவு பெரிய மூட்டையைத் தூக்கிக்கொண்டு அவன் எவ்வளவு தூரம் போக வேண்டுமோ ? ” என்று மற்ற பயணிகள் அனுதாபப்பட்டார்கள். அப்பொழுது ஒரு பயணி , “ அவனுக்கா படிக்கத் தெரியாது ? சிறிது நேரத்திற்கு முன்னால் நான் புகை பிடித்துக்கொண்டிருந்தேன். பக்கத்தில் உட்கார்ந்திருந்த அவன் , “ புகை பிடிக்கக்கூடாது என்று எழுதியிருக்கிறார்களே ! அதை நீ படிக்கவில்லையா ? என்று என்னைத் திட்டினான் , ” என்றான். அதைக் கேட்டதும் நடத்துனர் சினங்கொண்டு பேருந்திலிருந்து இறங்கினார். அவர் முத்துவைப் பின்தொடர்ந்து ஓடிப்போய் அவனை இழுத்து நிறுத்தினார்.

“ நீ ஏன் படிக்கத் தெரியாது என்று பொய் சொன்னாய் ? ” என்று நடத்துனர் கேட்டார். அதற்கு முத்து , “ நான் அப்படிச் சொல்லியிருந்தால் , பயணச்சீட்டு வாங்கச் சொல்வாயே ! அதனால்தான் நான் பொய் சொன்னேன். உண்மையில் நான் பிடோக்கில்தான் இறங்கவேண்டும் . என்னை சரியான இடத்தில் இறக்கிவிட்டதற்கு நன்றி , ” என்று கூறிவிட்டு நடந்தான்.



www.testpapersfree.com

13 முதல் 17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

13. நடத்துனரின் முக்கிய பொறுப்பு என்ன ?

( 1 ) பயணிகளைக் கண்காணிப்பது

( 2 ) பயணிகளுடன் உரையாடுவது

( 3 ) பயணிகளிடமிருந்து கட்டணத்தை வசூலிப்பது

( 4 ) பயணிகளுக்குப் பணிவிடைகள் புரிவது

14. முத்து ஏறிய பேருந்து எங்கு முடிவடையும் ?

( 1 ) பிடோக் சாலையில்

( 2 ) சிராங்கூன் சாலையில்

( 3 ) காத்தோங் சாலையில்

( 4 ) விக்டோரியா சாலையில்

15. நடத்துனர் முத்துவை ஏன் பேருந்தைவிட்டு இறங்கும்படிச் சொன்னார் ?

( 1 ) அவன் பயணச்சீட்டு வாங்காததால்

( 2 ) அவன் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டதால்

( 3 ) அவன் பணிவில்லாமல் நடந்துகொண்டதால்

( 4 ) அவன் தவறான பேருந்தில் ஏறிக்கொண்டதால்

16. மற்ற பயணிகள் ஏன் முத்து மீது அனுதாபப்பட்டார்கள் ?

( 1 ) அவன் வெகு தொலைவு நடக்கவேண்டியிருந்ததால்

( 2 ) அவனுக்குப் படிக்கத் தெரியாததால்

( 3 ) அவனை நடத்துனர் ஏசியதால்

( 4 ) அவன் கருவாட்டு மூட்டையைச் சுமக்கவேண்டியிருந்ததால்



www.testpapersfree.com

17. முத்து ஓர் ஏமாற்றுக்காரன் என்பதை எவ்வாறு அறியலாம் ?

( 1 ) புகை பிடித்தவனைத் திட்டியதிலிருந்து

( 2 ) கல்வி கற்காதவன் போல நடித்ததிலிருந்து

( 3 ) மீனவன் போல நடித்ததிலிருந்து

( 4 ) கருவாட்டு மூட்டையை வைத்திருந்ததிலிருந்து

சொற்பொருள்

18 முதல் 20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

18. தெரிவிப்பார்

(1) கத்துவார்
(2) சொல்வார்
(3) உணர்த்துவார்
(4) காண்பிப்பார்

19. கட்டளையிட்டார்

(1) உத்தரவிட்டார்
(2) அலறினார்
(3) கெஞ்சினார்
(4) முறையிட்டார்

20. அனுதாபப்பட்டார்கள்

(1) கலங்கினார்கள்
(2) நெகிழ்ந்தார்கள்
(3) தீர்மானித்தார்கள்
(4) இரக்கப்பட்டார்கள்



44

www.testpapersfree.com

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி :

சீமே தொடக்கப் பள்ளி
2009 : ஆசிரியர் தினக் கொண்டாட்டம் !!

மாணவர்களே உங்கள் கவனத்திற்கு !

மாபெறும் கலை நிகழ்ச்சியில் பங்கேற்க விருப்பமா ?

- வயலில் , பியானோ , கீத்தா போன்ற இசைக்கருவிகளை வாசிக்கத் தெரியுமா ?
- இனிமையாகப் பாடத் தெரியுமா ?
- ஆட விருப்பமா ? பத்து பேர் கொண்ட குழுவை அமைத்துப் பயிற்சி செய்யுங்கள் !
- நகைச்சுவையும் கருத்தும் நிறைந்த நாடகத்தைப் படைக்க விருப்பமா ?

நாள் : வியாழன் (பகல் மணி 2 ) இடம் : மண்டபம்

உங்கள் படைப்பை வெளிப்படுத்துங்கள் ! சிறந்த படைப்புகள் மட்டுமே கலைநிகழ்ச்சியில் பங்கேற்க முடியும் ! நமது பள்ளித் தலைமையாசிரியர் சிறந்த படைப்புகளைத் தெரிவு செய்வார் !!

உங்கள் ஆசிரியருக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்ப விருப்பமா ?

வாழ்த்துப் படிவங்களை எங்களிடமிருந்து பெற்று , பூர்த்திச் செய்து கொடுங்கள் !
இறுதி நாள் : செப்டம்பர் 27 !!

சிறந்த 50 வாழ்த்துச் செய்திகள் கொண்டாட்ட நிகழ்ச்சியின்போது திரையில் காட்டப்படும் !!

ஆசிரியர் - மாணவர் விளையாட்டுப் போட்டிகள் !

- ✓ காற்பந்து போட்டி
- ✓ கூடைப்பந்து போட்டி
- ✓ வலைப்பந்து போட்டி

பள்ளிக் குழுவைச் சேர்ந்த மாணவர்கள் ஆசிரியர்களுடன் மோதும் விறுவிறுப்பான போட்டிகளைக் காணத் தவறாதீர்கள் !



உங்கள் ஆதரவை நாடும்
ஆறாம் வகுப்பு
சட்டாம்பிள்ளைக் குழு
தலைவன் : ராகவன் (6A)





www.testpapersfree.com

21 முதல் 23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

21. இந்த அறிவிப்பை வெளியிட்டவர் யார் ?

(1) சீமே பள்ளி ஆசிரியர்கள்
(2) சீமே பள்ளித் தலைமையாசிரியர்
(3) சீமே பள்ளி விளையாட்டுக் குழு மாணவர்கள்
(4) சீமே பள்ளிச் சட்டாம்பிள்ளைத் தலைவன்

22. ஆசிரியர் தினக் கொண்டாட்டக் கலைநிகழ்ச்சியில் பங்கேற்க ஒரு மாணவர் எத்தகைய திறனைப் பெற்றிருக்கவேண்டும் ?

(1) ஏதேனும் ஓர் இசைக்கருவியை வாசிக்கத் தெரிந்திருக்கவேண்டும்
(2) திறமையாக விளையாடத் தெரிந்திருக்கவேணடும்
(3) நகைச்சுவையும் கருத்தும் அமைந்த நாடகத்தை ரசிக்கத் தெரிந்திருக்கவேண்டும்
(4) ஐவர் கொண்ட குழுவில் சேர்ந்து திறமையாக ஆடத் தெரிந்திருக்கவேண்டும்

23. சிறந்த வாழ்த்துச் செய்திகளை உருவாக்கும் மாணவர்கள் எவ்வாறு பாராட்டப்படுவர் ?

(1) அவர்களுக்கு ஆசிரியர்களுடன் காற்பந்து விளையாட வாய்ப்பு கிட்டும்
(2) அவர்களுடைய வாழ்த்துச் செய்திகள் கலைநிகழ்ச்சியின்போது காட்டப்படும்
(3) தலைமையாசிரியர் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் பாராட்டு தெரிவிப்பார்
(4) அவர்கள் அனைத்து விளையாட்டுகளையும் நேரில் காணும் வாய்ப்பைப் பெறுவர்



46

www.testpapersfree.com

24 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.

## “ ஆ ” பிரிவு

### ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குரிய பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

24. நான் கடையை அடைந்ததும் அம்மா வாங்கச் சொன்ன பொருள்களை நினைவு __________ முயன்றேன். அடுத்து நான் என் அம்மாவை என்னுடைய கைத்தொலைபேசி மூலம் தொடர்புகொண்டேன். 24.(    )

25. வாழை இலையை வெட்டியபோது அதன் __________ என் சட்டையில் படிந்துவிட்டது. சவர்க்காரத்தால்கூட அதை அகற்ற முடியவில்லை. 25.(    )

26. நாங்கள் மண்டபத்தில் பூப்பந்து விளையாடினோம். __________ குமரன் உணவகத்தில் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். 26.(    )

27. “தம்பிக்குப் பசிக்கிறது. கலா நீ , அப்பளத்தை சீக்கிரம் __________ !” என்று அம்மா என்னை அவசரப்படுத்தினார். 27.(    )

28. பள்ளி உணவகத்தில் ரதி என்னைத் துரத்திக்கொண்டு வந்தாள். மறு __________ அவள் வழுக்கித் தொப்பென்று விழுந்தாள். 28.(    )

(1) பொரி
(2) அவ்வேலையில்
(3) கணம்
(4) கூற
(5) கறை
(6) கனம்
(7) கரை
(8) கூர
(9) அவ்வேளையில்
(10) பொறி



47

www.testpapersfree.com

முன்னுணர்வுக் கருத்தறிதல்

கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| அந்நாட்டிலுள்ள காடுகளில் கொரில்லா எனப்படும் மனிதக்குரங்குகள் வாழ்ந்து வந்தன. மனிதர்கள் அதை வேட்டையாடி வந்ததால் அவற்றின் (29)______ குறைந்துகொண்டே வந்தது. கொரில்லாக்களை வெளிநாடுகளுக்கு (30)______ சென்று விற்பதில் பல கும்பல்கள் ஈடுபட்டிருந்தன. அவற்றின் நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு மிகவும் (31)______ கவனித்து வந்தது. | 29.(   )<br>30.(   )<br>31.(   ) |
| ஒரு சமயம் , கடத்தல்காரர்கள் ஒரு பெரிய கொரில்லாவை (32)______ பிடித்துவிட்டனர். அவர்கள் சிலருடன் அதன் விலையை (33)______ பேசினர். விலையை ஒப்புக்கொண்ட பிறகு , பணமும் பிராணியும் (34)______ . அப்போது அந்தக் கொரில்லா , " கையை (35)______ ! " என்று உத்தரவிட்டதும் அனைவரும் நிலை குலைந்து போய்க் கைகளைத் தூக்கினர். தாங்கள் கடத்தியது உண்மையான கொரில்லா அல்ல , கொரில்லா உடையினுள் இருந்த காவல் அதிகாரி என்பதைக் கடத்தல்காரர்கள் பின்னரே உணர்ந்தனர். | 32.(   )<br>33.(   )<br>34.(   )<br>35.(   ) |

| | | |
|---|---|---|
| 1. பிடித்து | 5. பேரம் | 9. வாழ்க்கை |
| 2. காட்டுங்கள் | 6. கடத்தி | 10. உன்னிப்பாக |
| 3. கைமாறின | 7. அனுப்பப்பட்டன | 11. உயர்த்துங்கள் |
| 4. ஆர்வமாக | 8. கள்ளத்தனமாக | 12. எண்ணிக்கை |



48

www.testpapersfree.com

சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி

கிராமத்தில் வாழ்ந்து வந்த முத்து , சிறு வயதில் பள்ளிக்குச் சரிவர போகவில்லை. அவனுடைய பெற்றோரும் அவனைத் தட்டிக் கேட்கவில்லை. கல்வி கற்காத முத்துவுக்கு யாரும் வேலை தரவில்லை. பெரியவானதும் அவன் வேட்டைத் தொழிலை நம்பி வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவன் காட்டிற்குப் போய்ச் சரியான இடமாகத் தேர்ந்தெடுப்பான். அடுத்து , தன் வலையை விரித்து , அதில் கொஞ்சம் தானியங்களைத் தூவுவான். இரை தின்ன வரும் பறவைகள் வலையில் சிக்கிக் கொள்ளும். அவன் அவற்றைப் பிடித்துச் செல்வான். அவன் வலையில் கிளிகளே அதிகமாகச் சிக்கின. முத்து அவற்றைச் சந்தையில் விற்றுத் தன் மனைவியுடன் செழிப்பாக வாழ்ந்து வந்தான்.

முத்து வளமாக வாழ்வது அவனது பக்கத்து வீட்டுக்காரனுக்குப் பொறாமையை ஏற்படுத்தியது. அவனுக்குத் துன்பம் விளைவிக்கத் திட்டம் தீட்டினான். தான் பேசுவது போல பேசும்படிக் கிளி ஒன்றைப் பழக்கினான். வேடன் எங்கே சென்று வலையை விரித்தாலும் அருகில் உள்ள மரத்தில் அமருமாறு அதற்குக் கற்றுக் கொடுத்தான். மறுநாள் காலையில் முத்து வலையுடன் காட்டிற்குப் புறப்பட்டான். அவனைத் பின்தொடர்ந்து அந்தக் கிளியும் பறந்து போனது. முத்து ஓரிடத்தில் வலையை விரித்தபோது அது அருகில் உள்ள மரத்தில் அமர்ந்து , " பறவைகளே ! வேடன் இங்கே வலையை விரித்துள்ளான். அதற்குள் தானியங்கள் கிடக்கின்றன. கீழே இறங்கித் தானியங்களை உண்ணாதீர்கள் ! " என உரக்கக் கத்தியது.

முத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான். அவன் வேறொரு இடத்திற்குப் போய் வலையை விரித்தான். அங்கேயும் இக்கிளி



49

www.testpapersfree.com

போய்த் தொல்லை தந்தது. தொடர்ந்து நான்குத் தினங்களாக வெறுங்கையுடன் வீடு திரும்புவதை முத்துவின் மனைவி கவனித்து வந்தாள். இறுதியாக அவள் தன் கணவனிடம் காரணம் கேட்டாள். தன் *வேலைக்கு இடையூறு* தந்து வந்த கிளியைப்பற்றி முத்து விவரித்தான். “ இனி என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை ! ” என்று முத்து அவளிடம் புலம்பினான். “ ஒரு கிளியின் பேச்சுக்காகவா அஞ்சுகிறீர்கள் ? அது உணர்ந்து பேசவில்லை. யாரோ சொல்லிக் கொடுத்ததை அப்படியே செய்கிறது. நாளை நீங்கள் அதன் பேச்சைப் பொருட்படுத்தாமல் , வழக்கம் போல வலையை விரித்துத் தானியங்களைத் தூவுங்கள். பிறகு மறைந்திருந்து நடப்பதைப் பாருங்கள் ! , ” என்றாள்.

மறுநாள் முத்து தன் மனைவி சொன்னதைப் போலவே செய்தான். வழக்கம் போல அந்தக் கிளி எச்சரிக்கை செய்தது. முத்துவோ , வலையில் தானியங்களைத் தூவிவிட்டு ஒரு புதிரில் பதுங்கிக்கொண்டான். எச்சரிக்கை செய்த கிளி , கீழே தானியங்கள் கிடப்பதைப் பார்த்துவிட்டுக் கீழே இறங்கியது. அது வலையில் அகப்பட்டுக் கொண்டது. அதைப் பிடித்த முத்து , “ நீ பொருள் உணராமல் பேசுகிறாய் என்பதை அறியாமல் இத்தனை நாள்கள் நான் ஏமாந்தேனே ! ” என்று மகிழ்ச்சியுடன் எண்ணிக்கொண்டு வீடு திரும்பினான்.



5C

www.testpapersfree.com

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 ம.)

36.முத்துவுக்கு அவ்வூரில் ஏன் யாரும் வேலை தர முன்வரவில்லை? (2 ம.)

37. முத்து எவ்வாறு பணம் ஈட்டினான்? (3 ம)

38. முத்துவின் பக்கத்து வீட்டுக்காரன் தீய எண்ணம் உடையவன் என்பதை நாம் எவ்வாறு அறியலாம்? ( 4 ம.)

39. கிளி எவ்வாறு முத்துவின் வேலைக்கு இடையூறு தந்தது? (4 ம.)

51

40. முத்துவின் மனைவி கெட்டிக்காரி என்பதை நாம் எவ்வாறு அறியலாம் ? (4 ம)

41. கிளி பொருள் உணராமல் பேசியது என்பதை அதன் எச்செயல் உணர்த்துகிறது? ( 3 ம)



www.testpapersfree.com

P5

CA- 1

P -5 தேர்வுத்தாள்-- 3

ஆப்ரஹாம் லிங்கன் ...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 3 | 2) 1 | 3) 4 | 4) 3 | 5)1 | 6) 1 |
| 7) 1 | 8) 4 | 9) 4 | 10) 1 | 11) 4 | 12)3 |
| 13)3 | 14)4 | 15)4 | 16)1 | 17)2 | 18) 3 |
| 19)1 | 20)4 | 21)4 | 22)1 | 23)2 | 24) 8 |
| 25) 5 | 26)9 | 27) 1 | 28)3 | 29)12 | 30)6 |
| 31)10 | 32)8 | 33)5 | 34) 3 | 35) 11 | |

36. முத்து சிறு வயதில் பள்ளிக்குச் சரி வர போகவில்லை. அதனால் அவன் கல்வி கற்காததால் அவ்வூரில் யாரும் அவனுக்கு வேலை தர முன்வரவில்லை.

37.முத்து காட்டிற்குச் சென்று சரியான இடமாகத் தேர்ந்தெடுத்து வலையை விரித்து அதில் சிக்கிக் கொள்ளும் கிளிகளைப் பிடித்து அவற்றைச் சந்தையில் விற்றுப் பணம் ஈட்டினான்.

38 . முத்து வளமாக வாழ்வதைப் பார்த்த அவனது பக்கத்து வீட்டுக்காரன் பொறாமையடைந்து அவனுக்குத் துன்பம் விளைவிக்கத் திட்டம் தீட்டினான். தான் பேசுவது போல பேசும்படி ஒரு கிளியைப் பழக்கி வேடன் எங்கு சென்று வலையை விரித்தாலும் அருகில் உள்ள மரத்தில் அமருமாறு கற்றுக் கொடுத்ததன் மூலம் அவன் தீய எண்ணம் உடையவன் என்பதை நாம் அறியலாம்

39. கிளி, வேடன் காட்டில் விரித்து வைத்த வலையின் அருகில் உள்ள மரத்தில் அமர்ந்து அங்கு வரும் பறவைகளிடம் வேடன் அங்கே வலையை விரித்துள்ளதாகவும், அதில் தானியங்கள் கிடப்பதாகவும், கீழே இறங்கி தானியங்களை உண்ண வேண்டாம் என்றும் உரக்கக கத்தி முத்துவின் வேலைக்கு இடையூறு விளைவித்தது.

40) பிரச்சனைக்குத் தீர்வு காணத் தெரியாமல் குழம்பிப் போயிருந்த முத்துவுக்கு ஆறுதல் கூறி, கிளி யாரோ சொல்லிக் கொடுத்ததை அப்படியே பேசுவதாகக் கூறி மறுநாள் வழக்கம் போல் வலையை விரித்து தானியங்களைத் தூவி மறைந்திருந்து நடப்பதைப் பார்க்கச் சொன்னதன் மூலம் முத்துவில் மனைவி கெட்டிக்காரி என்பதை நாம் அறியலாம்.

41) கிளி வழக்கம் போல் கத்தி விட்டு வலையில் கிடந்த தானியங்களை சாப்பிட கீழே இறங்கி அதில் சிக்கிக் கொண்டது.இச்செயலே கிளி பொருள் உணராமல் பேசியது என்பதை உணர்த்துகிறது.



www.testpapersfree.com

CA 1

P -5 தேர்வுத்தாள் -- 4

ஒரு சமயம் முல்லா ...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1)2 | 2)1 | 3) 4 | 4) 3 | 5) 2 | 6) 2 |
| 7) 2 | 8) 1 | 9) 4 | 10) 3 | 11) 3 | 12) 2 |
| 13) 2 | 14) 4 | 15) 3 | 16) 4 | 17) 4 | 18)1 |
| 19) 3 | 20) 3 | 21) 3 | 22) 1 | 23) 3 | 24) 3 |
| 25) 5 | 26) 6 | 27) 7 | 28) 2 | 29) 3 | 30) 8 |
| 31) 6 | 32)10 | 33)1 | 34) 12 | 35) 5 | |

36) பெரியவன் செந்தில் நேர்மையும் அடக்கமும் நிறைந்தவன்.இளையவன் வேலவன் மூர்க்க குணமும் ஏமாற்றுப் புத்தியும் நிறைந்தவன். இவ்வாறு இரு மகன்களும் குணத்தால் வேறுபட்டிருந்தனர்.

37)செந்தில் பணம் திருட்டுப் போகாமல் இருக்கவே அதை பத்திரமாக இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்தான்.

38)வேலவன் அண்ணனுக்குத் தெரியாமல் அண்ணன் பூட்டிய இரும்புப் பெட்டியில் உள்ள பணத்தை திருடிக்கொண்டு போய் மூன்று மைல் தூரத்தில் இருக்கும் ஓர் அடர்ந்த மரத்தடியில் புதைக்க சூழ்ச்சி செய்தான்.

39) செந்திலும் அவன் தந்தையும் பணம் திருட்டுப் போனது போல் காட்டிக் கொள்ளாமல் உரையாடிப் பணத்தைக் கண்டு பிடிக்க திட்டம் தீட்டினர்.

40) செந்திலின் தந்தை செந்திலிடம் தான் கொடுத்து வைத்திருந்த பணத்தை ஒரு காசு கூட குறையாமல் பாதுகாப்பாகத் திருப்பித் தந்ததைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார். அதைக் கேட்ட வேலவன் தான் திருடிய பணம் எப்படி அவர்கள் கைக்கு கிடைத்தது என்று எண்ணியதே அவன் குழம்பக் காரணம் ஆகும்.

41) வேலவனின் தந்தை அவனுக்கு பணத்தில் பாதிப் பணத்தைத் தர எண்ணியிருந்தார்.ஆனால் அவன் செய்த தவற்றுக்கு தண்டனையாக அவர் வேலனுக்குப் பணம் கொடுக்கவில்லை.

68

www.testpapersfree.com